திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சாலை தற்போது பி.ஏ.வி. ஓர்க்கிலே ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் அளவிலே புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியிலே தற்போது ஜல்லி சாலையாக போடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். மேலும் இந்தச் சாலையை சீர் செய்வதால் அப்பகுதி வேளாண்மை மக்களுடைய குறையை நிவர்த்தி செய்ய முடியும். ஆகவே, பரிசீலனை செய்யும் என்று சொன்னதை, தயவுசெய்து நல்ல தார்ச்சாலையாக அமைத்து, அப்பகுதி வேளாண்மை மக்களுடைய கோரிக்கையை வரும் ஆண்டிலே செய்து கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு பிறகுதான் இன்றைக்கு கரும்பு பயிரிடக்கூடிய பரப்பு உயர்ந்திருக்கிறது. 1990-ஆம் ஆண்டு தமிழகத்திலே 2 லட்சம் எக்டேரிலே கரும்பு பயிரிடப்பட்டது. அன்றைக்கு ஒரு டன் கரும்புக்கு 250 ரூபாய் வழங்கப்பட்டது. இன்றைக்கு 3 ஆண்டுகளுக்கு பிறகு புரட்சித் தலைவி அவர்கள் ஒரு டன் கரும்புக்கு, அதாவது 8.5 சதவிகித சர்க்கரை சத்து கொண்ட கரும்புக்கு 525 ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். எனவே, 2 லட்சம் எக்டேரிலே பயிரிடப்பட்ட கரும்பு என்பது இன்றைக்கு 3 லட்சம் எக்டேரிலே பயிரிடப்பட்டிருக்கிறது. எனவே, அதிகமாக கரும்பு பயிரிடப்படுகின்ற நேரத்திலே அதிக வருவாய் கரும்பு ஆலைகளுக்கு வரக்கூடிய நேரத்திலே இந்த செஸ்சும் உயர்கிறது. எனவே, இந்த ஆண்டு அந்த நிதி உயர்கின்றபொழுது இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 113, திரு. ஆ சுப்புரத்தினம், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர்.

113—

பிறமாநில வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் விதித்தல்

* **20594**—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நுழையும் பிற மாநிலங்களைச் சேர்ந்த வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் விதிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1995 மார்ச் 27]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் நுழையும் பிற மாநிலங்களைச் சேர்ந்த வாகனங்களுக்கு நுழைவுக கட்டணம் விதிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. பொதுவாக வணிக வரித் துறை கட்டணம் ஏதும் வசூலிப்பதில்லை. வரியை மட்டும்தான் விதித்து வசூல் செய்யப்படுகிறது.

முற்பகல் 10.55

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் வாங்கப்பட்டு, தமிழ்நாட்டுக்குக் கொண்டுவரும் வாகனங்களுக்கு நுழைவு வரி விதிக்கப்படுமா? அதே நேரத்தில் பிற மாநிலங்களில் வாங்கப்பட்ட வாகனங்களை அங்கேயே பதிவு செய்துகொண்டு, நுழைவு வரி கட்டாமல் இங்கே உயபோகப் படுத்துபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நுழையும் பிற மாநிலங்களைச் சேர்ந்த வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம்—ஆக்ட்ராய் விதிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. ஆனால் 1990-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு நுழைவு வரிச் சட்டம் Tamil Nadu Tax on entry of motor vehicles into local areas 1990—அமலுக்குக் கொண்டுவரப்பட்டு, நுழைவு வரி வசூலிக்கப்படுகிறது. இந்த நுழைவு வரியானது நுழைவுக் கட்டணத்திலிருந்து மாறுபட்டதாகும். இதன்படி மற்ற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரக்கூடிய வாகனங்கள், அந்த மாநிலத்தில் கடந்த 15 மாதங்களுக்கு உட்பட்டு பதிவு செய்திருப்பின், தமிழ்நாட்டிற்குள் சொந்த உபயோகத்திற்காக அல்லது விற்பனைக்காக எடுத்து வரப்படின், அந்த வாகனங்களுக்கு நுழைவு வரி வசூலிக்கப்படுகிறது. இந்த நுழைவு வரி, வாகனங்களைப் பதிவு செய்ய வருகிறபோது அமல்படுத்தப்படுகிறது. நுழைவு வரி விவரங்கள் இணைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெறும் இணைப்பாக இருந்தால் இங்கே வைத்துவிடலாம்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், பிற மாநிலங்களில் வாங்கி, அங்கேயே பதிவு செய்துகொண்டு, இந்த மாநிலத்தில் உபயோகப்படுத்தப்படுமானால், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுமென்று கேட்டிருக்கிறார்கள்.

பொதுவாக இந்தியாவில் ஒரு மாநிலத்தில் வாங்கப்பட்ட வாகனங்கள், ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர் வைத்திருக்கும் வாகனம் சொந்த உபயோகத்திற்காக எந்த மாநிலத்திலும் உபயோகப்படுத்தப்படலாம். ஆனால் தமிழ் நாட்டில் வரி விதிப்பை ஏய்ப்பதற்காக, அண்டை மாநிலமான பாண்டிச்சேரியில் தமிழ்நாட்டைக் காட்டிலும் குறைந்த வரி விகிதம் இருக்கிறதென்ற காரணத்திற்காக, அங்கேயே வாங்கி, அங்கேயே பதிவு செய்துகொண்டு, இங்கு உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நமக்கு வரி வசூலில் பெரும் இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்காகத்தான் நாம் நுழைவு வரி முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். இது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இருப்பினும் அண்டை மாநிலமான, பாண்டிச்சேரி மிக அருகாமையில் இருக்கிற காரணத்தால், அங்கே பதிவு செய்துகொண்டு, தொடர்ந்து அங்கேயே புதுப்பித்தும்கொண்டு, இங்கே உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்காக துறை ஆய்வு செய்து, தகுந்த சட்டமுன்வடிவை நிறைவேற்றி அமல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு விதிக்கப்படும் வரியின் மூலம் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும் ஆண்டு வருவாய் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-ம் ஆண்டுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1990-ம் ஆண்டு 0.55 கோடிதான் நமக்கு வருவாய் ஈட்டப்பெற்றது. அதற்குப் பிற்பாடு, 1990-91-ஆம் ஆண்டில் 19.67 கோடியும், 1991-92-ஆம் ஆண்டில் 24.84 கோடியும், அதை அடுத்து 1992-93-ஆம் ஆண்டில் 42.07 கோடியும், 1993-94-ஆம் ஆண்டில் 69.51 கோடியும், நடப்பு ஆண்டில் பிப்ரவரி மாதம்வரை 91.01 கோடியும், ஆக மொத்தம் 247.65 கோடி ரூபாய் நுழைவு வரி மூலம் தமிழகத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 114, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

114—

நார்த்தமலையில் கிரானைட் தொழிற்சாலை அமைத்தல்

*** 25351—**திரு. சி. குழந்தைவேலு:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—